உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 01.09.2026 • மலர் 04 • இதழ்: 244 • செவ்வாய் • Edition : Nagercoil • 01.09.2026 • Vol : 04 • Issue : 244 • Page : 4 • Rs. 5/-

# காஞ்சியில் செமிகண்டக்டர் உற்பத்தி பூங்கா, கோவையில் டிஜிட்டல் நிதி மையம்

## முதல்வர் விஜய் அறிவிப்பு



சென்னை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் செமிகண்டக்டர் மற்றும் மின்னணுவியல் உற்பத்திப் பூங்கா, கோயம்புத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் பல்முனை சரக்குப் போக்குவரத்து மையம் அமைப்பது தொடர்பாக பேரவை விதி எண் 110இன் கீழ் முதல்வர் விஜய் சில முக்கிய அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.

முதல்வர் விஜய் பேரவையில் பேசுகையில், "தமிழகத்தில் செமிகண்டெக்டர் துறையில் (Semiconductor Sector) அதிக அளவு முதலீட்டினை ஈர்க்கவும், இத்துறையில் நமது மாநிலத்தின் பங்கினை கணிசமான அளவு உயர்த்திடவும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுரமங்கலத்தில் Semiconductor & Electronics Manufacturing Park, ரூ.175 கோடி மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனம் மூலம் அமைக்கப்படும்.

இப்பூங்காவில், Semiconductor துறையில் புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஏதுவாக உலகத்தரம் வாய்ந்த, R & D – Research and Development வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் இத்துறையில் சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் வரை முதலீடுகள் ஈர்க்கப்படும். மேலும், சுமார் 5,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

கோவையில் டிஜிட்டல் நிதி மையம்:

நிதித் தொழில்நுட்ப (FinTech) புதுமைகளுடன் டிஜிட்டல் நிதிச் சேவைகளை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மூலம் கோயம்புத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் (Coimbatore Fin Tech Hub) பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

உலகத் தரத்திலான வசதிகள், அலுவலக இடங்கள், புத்தொழில் நிறுவனங்கள், நவீன ஆய்வகங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு போன்ற அதிநவீன வசதிகள் இம்மையத்தில் இடம்பெறும். இதன் மூலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில், நிதி மற்றும் நிதிநுட்பத் துறையில் உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கவும், நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும், உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

திருச்சியில் பல்முனை சரக்கு போக்குவரத்து மையம்

202627ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் முக்கிய இடங்களில் பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காக்கள் (Multi Model Logistics Parks), உலர் துறைமுகங்கள் (Dry Ports) அமைத்து முதலீட்டை ஈர்க்க அரசு முயற்சிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள மாவட்டப் பகுதிகளில் முக்கியஉற்பத்தித்தொழிற்சாலைகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிகளவில் உள்ளதால், தமிழக தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மூலம் ஆய்வு மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயார் செய்து அதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் "பல்முனை சரக்கு போக்குவரத்து மையம் (Multi Model Logistics Hub)" ஒன்று அமைக்கப்படும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தமிழக முதலமைச்சர் காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க இருப்பதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து நீர்வளத் துறை செயலாளர் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு மேற்கொண்டனர்.

## சர்வதேச போட்டியில் முதல் பரிசு பெற்ற குமரி மாவட்ட செஸ் வீரருக்கு கலெக்டர் பாராட்டு



நாகர்கோவில், செப்.1

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேற்று 31. ம் தேதி சர்வதேச கிராண்ட் மாஸ்டர் போட்டியில் வெற்றி பெற்ற எஸ்.அஸ்வத் க்கு பொன்னாடை மற்றும் சந்தண மாலை அணிவித்து கௌரவித்து பாராட்டியதோடு மேலும் உலகளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிகளை பெற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்தினார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலைச் சேர்ந்த இளம் செஸ் வீரர் எஸ். அஸ்வத் புனேவில் நடைபெற்ற சர்வதேச கிராண்ட் மாஸ்டர் போட்டியில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். இப்போட்டியின் கடைசி மூன்று சுற்றுகளிலும் தொடர் வெற்றி பெற்ற அவர், இறுதிச் சுற்றில் அமெரிக்க வீரர் கண்ணன் வைத்தியநாதனை கருப்பு காய்களுடன் எதிர்கொண்டு வீழ்த்தினார். இதன் மூலம் இந்தியாவின் 98வது கிராண்ட் மாஸ்டர், தமிழ்நாட்டின் 38வது கிராண்ட் மாஸ்டர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தின் முதல் கிராண்ட் மாஸ்டர் ஆகிய வரலாற்றுப் பட்டங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் வினு, கன்னியாகுமரி மாவட்ட செஸ் அசோசியேஷன்தலைவர் ரெக்ஸ், தமிழ்நாடு மாநில செஸ் அசோசியேஷன் உதவி தலைவர் எப்ரேம், விளையாட்டு வீரரின் பெற்றோர்கள் சிவா, ஷீலா, சகோதரி.பார்கவி, பட்டேல்சுந்தரம்பிள்ளை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரியில் 1 மாதத்தில் 1 லட்சத்து 70 ஆயிரம் சுற்றுலா பயணிகள் பார்வை

### பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் அறிவிப்பு

கன்னியாகுமரி,செப்.1

சர்வதேச சுற்றுலாதலமான கன்னியாகுமரி கடலில் அமைந்து உள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அதன் அருகில் உள்ள மற்றொரு பாறை 133 உயர திருவள்ளுவர் சிலையும் எழுப்பப்பட்டு உள்ளது. இவற்றை இணைக்கும் வகையில் கண்ணாடி பாலமும் அமைக்கப்பட்டு உள்ளது. இவற்றை தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் படகில் சென்று பார்த்து வருகிறார்கள்.

இவற்றை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக தமிழக அரசு நிறுவனமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் படகு போக்குவரத்தை நடத்தி வருகிறது. தினமும் காலை 8 மணிக்கு தொடங்கி மாலை 4 மணி வரை இடைவெளியின்றி தொடர்ச்சியாக படகு போக்குவரத்து இயக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கடந்த 15ஆம் தேதி சுதந்திர தினத்தையொட்டியும் 26ந் தேதி முதல் ஓணம் பண்டிகை தொடர் விடுமுறையை ஒட்டியும் கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அலைமோதியது. சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் மண்டபம், திருவள்ளூர் சிலை ஆகியவற்றை ஆர்வமுடன் சென்று பார்வையிட்டனர். இந்த விடுமுறை காலமான ஒரே மாதத்தில் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 79 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டுள்ளனர்.

இதனை பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

## நாகர்கோவிலில் நகைக்காக மூதாட்டி கொலை வாலிபர் கைது



நாகர்கோவில், செப். 1

நாகர்கோவில் அருகே வடிவீஸ்வரம் தேரடி தெருவை சேர்ந்தவர் ஐயப்பன் மனைவி சின்னம்மாள் (77). இவர்களுக்கு வனஜா, சங்கரி, லட்சுமி என்ற மூன்று மகள்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஐயப்பன் இறந்து விட்ட நிலையில் சின்னம்மா தனியாக வசித்து வந்தார்.

நேற்று முன்தினம் மதியம் அவரது வீட்டில் இருந்து புகை வருவதை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரது மகள் வனஜாவுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் சென்று பார்த்த போது சின்னம்மாள் தீயில் கரிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார். உடனடியாக கோட்டாறு போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்திய போது சின்னம்மாவின் பின்தலையில் பலத்த காயங்கள் இருந்ததும் அவர் கை மற்றும் முடி எரிக்கப்பட்டிருந்ததும் தெரியவந்தது. மேல் அவரது கழுத்தில் கடந்த 15 பவன் நகையும் திருடப்பட்டு இருந்தது. அத்துடன் பீரோவில் இருந்த சுமார் 40 பவுன் நகைகளையும் யாரோ திருடி விட்டு தப்பி சென்றது தெரிய வந்தது. போலீசார் சின்னம்மாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அனுப்பி வைத்தனர் பின்னர் தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. மேலும் சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்த போது ஹெல்மெட் அணிந்து வந்த நபர் ஒருவர் சின்னமாவின் வீட்டில் நுழைந்தது போன்ற காட்சி பதிவாகி இருந்தது. விசாரணையில் சின்னம்மா வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்ற மாட்டுப் பண்ணை தொழிலாளி வேல்ராஜ் என்ற விக்னேஷ் (33) என்பதும் தெரியவந்தது. விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்தவர் நாகர்கோவில் பகுதியல் வசித்து வருகிறார்.

தனிப்படை போலீசார் அவரை கைது செய்தனர். கோட்டாறு போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரித்தனர். விசாரணையில் வேல்ராஜ் மூதாட்டியை கொலை செய்து நகைகளை திருடியதை ஒப்புக்கொண்டார். இதை அடுத்து வேல்ராஜை போலீசார் கைது செய்து கொள்ளையடிக்கப்பட்ட 40 பவுன் நகைகளை மீட்டனர். கொலை செய்யப்பட்ட 8 மணி நேரத்தில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதை அடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தனிப்படை போலீசாரை பாராட்டினார்.

## சேலத்தில் ட்ரோன்கள் பறக்க தடை

சேலம் செப் 1

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்று 01.09 2026 செவ்வாய்க்கிழமை சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்காக தண்ணீர் திறந்து வைக்க வருகை புரிந்துள்ளார். அதனையொட்டி சேலம் மாவட்டத்தில் இன்று ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார்.

## நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாகர்கோவில், செப். 1

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில்கூட்டரங்கில்,மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 380 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்றுக்கொண்டார். அதனைத்தொடர்ந்து 9 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணையும், 1 பயனாளிக்கு விதவை உதவித்தொகைக்கான ஆணையும் வழங்கினார். மேலும் குமரி மாவட்டத்தில் பொதுமக்களுக்கு இணையவழி வருவாய்த் துறை சான்றிதழ்களை அரசு நிர்ணயித்த கால அவகாசத்திற்குள் விரைந்து வழங்கியதற்காகவும், கடந்த 3 மாதங்களாக அனைத்து சான்றிதழ்களையும் குறைந்த நிராகரிப்பு மட்டுமே செய்து அதிகப்படியான சான்றிதழ்களை காலதாமதமின்றி பொதுமக்களுக்கு வழங்கியதற்காகவும் தமிழக அரசால் பாராட்டி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நற்சான்று வழங்கப்பட்டது.

மேற்படி அரசால் வழங்கப்பட்ட நற்சான்றினை நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி, உதவி ஆட்சியர் பயிற்சி ர. மோனிகா, மாவட்ட ஆட்யரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.காளீஸ்வரி, உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தஞ்சாவூர் அடுத்துள்ள மருங்குளம் அரசு தோட்டக்கலை பண்ணையில் கலெக்டர் ரேவதி ஆய்வு

தஞ்சாவூர் செப்.1

தஞ்சாவூர் அடுத்துள்ள மருங்குளத் தில்உள்ள அரசு தோட்டகலை பண்ணையில் ஆய்வு செய்த கலெக்டர் ரேவதி அதிக மகசூல் கிடைக்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்

தஞ்சாவூர் மாவட்டமருங்குளத் தில் அரசு தோட்டக்கலை பண்ணை உள்ளது தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் செயல்பட்டு, வரும் இப் பண்ணையில் சுமார் 10.77 ஹெக்டர் பரப்பளவில் உள்ளது. இப் பண்ணை யில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு தோட்டக்கலை பயிறு சாகுபடிகள் மற்றும் வளர்ச்சி பணிகளை மாவட்ட கலெக்டர் ரேவதி நேரில் சென்று பார்வை யிட்டு ஆய்வு செய்தார்



குறிப்பாக பண்ணையில் சாகுபடி செய்யப்பட்டு வரும் டிராகன்பழம் உள்ளிட்ட பழப் பயிர்களின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு பணிகள் தாய் தாவரப்பகுதி, நாற்றங்கால் மற்றும் பிற பயிர் உற்பத்தி பகுதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது

மேலும் பண்ணையில் மொத்த நிலப்பரப்பில் தற்போது பயன்படுத் தப்பட்டு வரும் பகுதிகள் மற்றும் மேலும் பயன்பாட்டிற்கு கொண்டு வரக்கூடிய0.65 ஹெக்டர் நிலப்பரப் பை முழுமையாக பயன்படுத்தி தோட்டக்கலை பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார் பண்ணையில் பழப்பயிர்கள், நாற்று உற்பத்தி மற்றும் விதை உற்பத்திப் பணிகள் மேம்படுத்து வதுடன், நவீன தொழில்நுட்பங் களை பயன்படுத்தி ,அதிக மகசூல் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்

இந்த ஆய்வின் போது தோட்டக் கலைத் துறை துணை இயக்குனர் சக்திவேல் ,உதவி இயக்குனர் முத்தமிழ் செல்வி, தோட்டக்கலை அலுவலர் தீனதயாளன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மழைநீரில் நனையும் ரேஷன் கடை நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை



மருதம்பாறை அருகே கணபதிகல் பகுதியில் செயல்பட்டு வரும் ரேஷன் கடை பழுதடைந்து, மழை காலங்களில் அரிசி மூட்டைகள் மழையில் நனையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கணபதிக்கல் பகுதியில் சுமார் 200 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் செயல்படும் ரேஷன் கடை மிகவும் சேதமடைந்து கூரை பகுதியில் புற்கள் வளர்ந்தும், மழை பெய்யும் போது மழை நீர் உட்புகுந்து அரிசி மூட்டைகள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் வாசலின் (ஷட்டர்) கீழ் பகுதி உடைந்து எலிகள் உட்புகுந்து அரிசி மூட்டைகளை செதப்படுத்தவதாகவும், இதனை தவிர்க்க தற்போது வாசலில் கற்களை கொண்டு அடைத்து வைத்துள்ளதாகவும் கடை ஊழியர் மற்றும் அப்பகுதி மக்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

எனவே இதற்கு அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காரைக்குடியில் மாபெரும் இலவச எலும்பு அடர்த்தி மற்றும் மூட்டு வலி மருத்துவ முகாம்

## நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று பயன் பெற்றனர்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில், குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், காரைக்குடி ரோட்டரி சங்கம் மற்றும் காரைக்குடி வெல்பர் அசோசியேஷன் ஆகியவை இணைந்து நடத்திய மாபெரும் இலவச எலும்பு அடர்த்தி சோதனை மற்றும் மூட்டு வலி இலவச மருத்துவ முகாம், காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று பயனடைந்தனர்.

நிகழ்ச்சிக்கு மருத்துவமனை சேர்மன் டாக்டர் குமரேசன் தலைமை வகித்து, அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக எல்.ஐ.சி. முகவர் சங்கத் தலைவர், மதுரை கோட்டம் மரிய லூயிஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

காரைக்குடி ரோட்டரி சங்கத் தலைவர் ருக்மா சரவணன் வாழ்த்துரை வழங்கினார். காரைக்குடி வெல்பர் அசோசியேஷன் சார்பில் இஸ்மாயில் வாழ்த்துரை வழங்கினார்.

முகாமில் நான்கு சிறப்பு எலும்பு மற்றும் மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு எலும்பு மற்றும் மூட்டு தொடர்பான பிரச்சினைகள் குறித்து பரிசோதனை செய்து, மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

மேலும், வாசன் கண் மருத்துவமனை சார்பில் பொதுமக்களுக்கு இலவச கண் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. இதனுடன் பிசியோதெரபி மற்றும் ஆயில் தெரப்பி சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

பொதுமக்களுக்கு ஒரே இடத்தில் பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் நிபுணர் ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்பட்டதால், இந்த மருத்துவ முகாம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனை சார்பில் விவேகானந்தன், டைம்ஸ் ஹெல்த் பவுண்டேஷன் மற்றும் சாரிட்டபிள் டிரஸ்ட் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# எதிர்காலத்திற்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொள்வது எப்படி? எஸ்எஸ்விஎம் ட்ரான்ஸ்பார்மிங் இந்தியா 2026 மாநாடு




கோவை, செப்.1: எஸ்எஸ்விஎம் கல்வி நிறுவனத்தின் சார்பில் 5வது ஆண்டாக நடைபெறும் 'ட்ரான்ஸ்பார்மிங் இந்தியா 2026' மாநாடு, "எதிர்காலத்திற்கு ஏற்ப மாறுங்கள்" என்ற தலைப்பில் கோவை எஸ்எஸ்விஎம் வேர்ல்ட் ஸ்கூலில் 3 நாட்கள் நடைபெற்று வருகிறது.

தொழில்நுட்பவளர்ச்சி, மாறிவரும் வேலை வாய்ப்புகள் மற்றும் அதிகரிக்கும் சவால்களுக்கு இளைஞர்களை தயார்படுத்துவது குறித்து மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது. கல்வியுடன் மன உறுதி, உடல்நலம், உணர்ச்சி நல்வாழ்வு, ஊட்டச்சத்து, உடற்பயிற்சி, ஒழுக்கம் உள்ளிட்ட அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எஸ்எஸ்விஎம்கல்விநிறுவனங்களின் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர் டாக்டர் மணிமேகலை மோகன் கூறுகையில், "கல்வி என்பது தேர்வு மற்றும் வேலைவாய்ப்புக்காக மட்டுமல்ல. தோல்விகளை எதிர்கொள்ளும் மன உறுதி, சூழ்நிலைக்கு ஏற்ப மாறும் தன்னம்பிக்கை மற்றும் உடல், மன நலனைப் பேணும் விழிப்புணர்வுடன் குழந்தைகளை வாழ்க்கைக்கு தயார்படுத்த வேண்டும்" என்றார்.

பல்துறை சாதனையாளர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இம்மாநாடு, எதிர்காலத்தை கணிப்பதைவிட அதற்கேற்ப மாற்றிக்கொள்ளும் திறனை இளைஞர்களிடம் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# வேலூர் அண்ணாசாலை தொன் போஸ்கோ மேல்நிலை பள்ளி வளாகத்தில் வெற்றியான் மிஷின் துவக்க விழா




வேலூர் மாவட்டம் வேலூர் அண்ணாசாலை தொன் போஸ்கோ மேல்நிலை பள்ளி வளாகத்தில் வெற்றியான் மிஷின் துவக்க விழா நடைபெற்றது இந்தியாவின் 80 வது சுந்ததிர தினத்தை முன்னிட்டு ASTREVE PRIVET ELIMITED சார்பில் 80.PAY LOAD வின்வெளிக்கு LAUNCH. செய்யும் முன்னோட்ட முயிற்சி நடைபெற்றது CEO ராகவன். வரவேற்புடன் நிகழ்ச்சி தொடங்கியது இதனை தொடர்ந்து ( CTO) mission துவக்க உரை மித்தேஷ் கண்ணா. நிகழ்த்தினார் இதனை தொடர்ந்து (CEO) ராகவன் ( CTO) மித்தேஷ் கண்ணா. மற்றும் பிரனவ் நிதிஷ்.அனிஷ்.அனைத்து சிறப்பு அழைப்பாளர் களையும் கௌரவிக்க பட்டது பின்னர் தொன் போஸ்கோ பள்ளிதாளலர் அருட்தந்தை டாக்டர் ராய் லாசர். J. சதீஷ். CEO MD Only intrns Pri Ltd தமிழ்ச் செல்வன் VC& Custer ente prise head vode Fone Idea kishoreChandran. Foundaer& President CSR Consutent ரமா தேவி. S. mentor. Stertup India TN B. பாஸ்கரன். msme ஆகியோர் கலந்து கொண்டு சிறப் புறையாற்றினார்கள்

மேலும் இந் நிகழ்ச்சி இறுதியில் ராகவ் நன்றியுரையாற்றினார் மற்றும் இந்நிகழ்ச்சியை Auxilium College Asst Pro Fossor Dr. ஆரோக்கிய அமுதா.முன் நின்றிநடத்தினார்மேலும் இந் நிகழ்ச்சி மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையி னடையே வின்வெளி அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமையான சிந்தனைகளை தூண்டும் வகையில் அமைந்தது



# தருமபுரி ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருக்கல்யாண வைபவம்

தருமபுரி செப்.01

தருமபுரி நகரம் எம். ஏ. தங்கவேல் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் விழாவை முன்னிட்டு ஸ்ரீ ராமலிங்கேஸ்வரருக்கும், சௌடேஸ்வரி அம்மனுக்கும் திருக்கல்யாண வைபவம் நடைபெறுவதையொட்டி ஊர் பொது மக்கள் சார்பில் வளையல், விபூதி, மஞ்சள், மாங்கல்யகயிறு, குங்குமம், பழங்கள் மற்றும் வெள்ளம், வருகடலை ஆகியவைகளை சீர்வரிசையாக எடுத்து கொண்டு ஊர்வலமாக வந்தனர். பிறகு கணபதி ஹோமம், மகா தீபாரதனைகள் செய்யப்பட்டு ஸ்ரீ ராமலிங்கேஸ் வரருக்கும், சௌடேஸ்வரி அம்மனுக்கும் திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் நகரப் பகுதியிலிருந்து ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு திருக்கல்யாண வைபவத்தை கண்டு களித்தனார். பின்னர் திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மதுரையில் லட்சுமிபுரம் அரசமரம் இரட்டை கணபதி பிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேகம்



மதுரை லட்சுமிபுரம் அரசமரம் இரட்டை கணபதி பிள்ளையார் கோவில் ஜீர்னோத்தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் விழா மங்கல இசையுடன் கணபதி ஹோமம் மகாலட்சுமி ஹோமம் நவகிரக ஹோமம் உள்ளிட்ட யாக சாலை பூஜைகளை தொடந்து ஆவணி மாதம் 14ஆம் தேதி காலை 9.05 மணி முதல் 10.15 மணிக்குள் துலா லக்கனத்தில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க புனித நீரானது கோபுர கலசத்திற்கு ஊற்றப்பட்டு, கலசத்தில் ஊற்றப்பட்ட புனித நீரை பக்த கோடிகளுக்கு தெளிக்கப்பட்டது

தொடர்ந்து இரட்டை பிள்ளையாருக்கு பல்வேறு வகையான அபிஷேக ஆராதனைகளும் தீபராதனைகளும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது

இந்தகோயில் ஐந்து கும்பாபிஷேகம் நடைபெற்று மிக பழமையான பிள்ளையார் கோவில் என கோவில் நிர்வாகம் தெரிவித்தனர் மக்கள்வழிபாடு செய்துதரிசனம் செய்தனர் இந்த நிகழ்ச்சியில் சிறப்புஅழைப்பாளராக டாக்டர் சரவணன் தெற்கு அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டார் கோவில் நிர்வாகிகள் தலைவர் அமர்நாத் குபேந்திரன் குபேந்திரன்நாத் ஈஸ்வரலால் ஜோதிநாத் ஹரிஹரன் ரமேஷ் பாபு உள்ளிட்ட நிர்வாகிகள் கும்பாபிஷேக நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்தனர் மேலும் தொடர்ந்து அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது

# புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் செல்போன் கொண்டு செல்ல தடை

## நாளை முதல் அமல்



தஞ்சாவூர், செப்.1: தஞ்சாவூர் அருகே உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலுக்குள் பக்தர்கள் செல்போன் கொண்டு செல்ல செப்டம்பர் 1ம் தேதி முதல் தடை விதிக்கப்படுகிறது.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் உத்தரவின்படி, கோவிலின் புனிதத் தன்மை, ஒழுங்கு மற்றும் அமைதியான சூழலை பாதுகாக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்லும் இக்கோவிலில், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் கூட்டம் அதிகமாக காணப்படும்.

பக்தர்கள் செல்போன்களை பாதுகாப்பாக ஒப்படைக்க கோவிலின் கிழக்கு மற்றும் வடக்கு வாசல் அருகே பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அங்கு ரூ.5 கட்டணம் செலுத்தி செல்போனை ஒப்படைத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தரிசனம் முடிந்து ரசீதை காண்பித்து செல்போனை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

தடையை மீறி செல்போனை கோவிலுக்குள் எடுத்துச் சென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. பக்தர்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

### பணி நிரந்தரம், ஒப்பந்ததாரர் மூலம் ஊதியம் வழங்க எதிர்ப்பு

# ஊராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு தூய்மை பணியாளர்கள் தர்ணா




காரைக்குடி, ஆக.31:

சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட சங்கராபுரம் ஊராட்சி, காரைக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது காரைக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது.

சங்கராபுரம் ஊராட்சி அலுவலகத்தில் 60க்கும் மேற்பட்ட தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. ஊராட்சி நிர்வாகம் செயல்பட்டு வந்த காலத்தில் தங்களுக்கான ஊதியம் உரிய தேதியில் ஊராட்சி நிர்வாகத்தின் மூலம் வழங்கப்பட்டதாகவும், தற்போது SKC என்ற ஒப்பந்ததாரர் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்படும் ஊதியம் அறிவிக்கப்பட்ட தேதியில் வழங்கப்படாமல் காலதாமதமாக வழங்கப்படுவதுடன், ஊதியத் தொகையிலும் குறைபாடுகள் இருப்பதாக தூய்மை பணியாளர்கள் குற்றம்சாட்டினர்.

மேலும், தூய்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் இருப்பதாகவும், இதனால் பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை வாகனங்களில் கொண்டு செல்லும் போது சாலையில் குப்பைகள் கொட்டும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். இதனால் பொதுமக்களுக்கும் தங்களுக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்படுவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

பணி நிரந்தரம், ஊதியத்தை உரிய காலத்தில் வழங்குதல், ஊதியக் குறைபாடுகளை சரிசெய்தல் மற்றும் தூய்மைப் பணிக்கான வாகனங்களை முறையாக பராமரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தற்காலிக தூய்மை பணியாளர்கள் சங்கராபுரம் ஊராட்சி அலுவலகம் முன்பு முற்றுகையிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அங்கு பணியாற்றும் அரசு அலுவலர்

# திமுகவில் இருந்து விலகினார் தோப்பு என்.டி.வெங்கடாசலம்



ஈரோடு, செப்டம்பர் 01 :

திமுக ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான தோப்பு என்.டி.வெங்கடாசலம், திமுகவின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட கட்சிப் பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், கழகத் தலைவர் அவர்களுக்கு தனது பணிவுடன் வணக்கம் எனத் தெரிவித்து, தன் மீது நம்பிக்கை வைத்து மாவட்டக் கழக பொறுப்பாளராகவும், பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகவும் வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், கட்சியில் தன் மீது நம்பிக்கை வைத்து வழங்கப்பட்ட பொறுப்புகளை ஏற்று பணியாற்றி வந்ததாகவும், கட்சிப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், கழகத்தில் ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்கள் தனது மனதை பெரிதும் பாதித்துள்ளதாக கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, மாவட்டக் கழக செயல்பாடுகள் மற்றும் தேர்தல் காலகட்டத்தில் தனக்கும், தன்னுடன் பணியாற்றியவர்களுக்கும் ஏற்பட்ட சில சம்பவங்கள் தனக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் கூறியுள்ளார்.

இதனால், இனிமேலும் கட்சிப் பணிகளில் தொடர்ந்து செயல்படுவதற்கு தனது மனம் இடம் கொடுக்கவில்லை என்றும், இதன் காரணமாக திமுகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதாகவும் தோப்பு என். டி.வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

தனது இந்த முடிவை கட்சித் தலைமையிடம் தெரிவித்துள்ள அவர், இதுவரை தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகளுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரும், ஈரோடு மாவட்ட திமுகவின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவருமான தோப்பு என். டி.வெங்கடாசலம் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்திருப்பது ஈரோடு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மதுரை செல்லம் சோப் மகாலில் செல்ல விநாயகர் கோவில் மகா அஷ்டபந்தன கும்பாபிஷேகம்



மதுரை: மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள செல்லம் சோப் மகாலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செல்ல விநாயகர் திருக்கோவில் மகா அஷ்டபந்தன கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம் உள்ளிட்ட சிறப்பு யாகசாலை பூஜைகள் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்றன. தொடர்ந்து யாக சாலையில் இருந்து புனித நீர் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு, கோவில் கோபுர கலசத்திற்கு ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து செல்ல விநாயகருக்கு பல்வேறு வகையான அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு தீபாராதனைகளும் நடைபெற்றன. விழாவில் ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செல்லம் சோப் குழுமத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

விழாவில் செல்லம் சோப்குழுமநிர்வாகத்தினர் பேசுகையில், "செல்லம் சோப் மகால் தொடங்கப்பட்டு தற்போது 36 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த காலகட்டத்தில் ஏராளமான குடும்பங்கள் இம்மாளிகையில் திருமணம் உள்ளிட்ட பல்வேறு சுப நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். மாளிகை தொடங்கப்பட்ட நாள் முதல் இங்கு தனியாக கோவில் அமைக்கப்படவில்லை. இதனால் திருமணம் முடிந்த பின்னர் மணமக்கள் விநாயகரை தரிசிப்பதற்காக வேறு கோவில்களுக்கு செல்ல வேண்டிய நிலை இருந்தது. இதுகுறித்து வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பத்தினர் தொடர்ந்து ஆலோசனைகளை தெரிவித்தனர்.

இதனை கருத்தில் கொண்டு, மாளிகையின் கன்னி மூலையில் விநாயகர் ஆலயம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, புதிதாக விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த விநாயகருக்கு 'செல்லப் பிள்ளையார்' எனபெயரிடப்பட்டுள்ளது" என்றனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஆர்.என்.புதூர் அரசு செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்பு பள்ளியில் 10,12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாற்றுத்திறனாளி மாணவ,மாணவியர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் நேற்று பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர் கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.

# சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது

சேலம் செப் 1

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு துறை அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பயன்கள் பெறுவதில் ஏதேனும் குறைகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 09.10.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10:30 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மண்டல இணை இயக்குனர் கருவூலம் மற்றும் கணக்கு துறை வேலூர் அவர்களின் முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற உள்ளது. எனவே சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு துறை அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களது ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்கள் தொடர்பாக குறைகள் இருந்தால் அவற்றை மனுக்களாக இரண்டு பிரதிகள் எடுத்து 30.09.2026 புதன்கிழமை மாலை 5.45 மணிக்குள் சேலம் மாவட்ட ஆட்சியர்அலுவலக முதல்தளம் அறை எண். 123 ல் உள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கணக்குகள் அவர்களிடம் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# திருப்பூரில் 'வீ த லீடர்ஸ்' உறுப்பினர் சேர்க்கை முகாம்

## பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்



திருப்பூர், செப்.1:

திருப்பூரில் 'வீ த லீடர்ஸ்' (We The Leaders Foundation) அமைப்பின் சார்பில் நடைபெற்ற புதியஉறுப்பினர்சேர்க்கை முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு மளிகைப் பொருட்கள் மற்றும் தூய்மை உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

'சுத்தமான, வளமான தமிழகம்' என்ற இயக்கத்தின் கீழ், வீ த லீடர்ஸ் அமைப்பின் நிறுவனர் கே. அண்ணாமலை தலைமையில் தமிழகம் முழுவதும் தூய்மைப் பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக திருப்பூர்மாநகரம், தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டை மாரியம்மன் கோவில் முன்புறத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து, கையொப்பமிட்டு அமைப்பில் இணைந்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும், 20க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு மளிகைப் பொருட்கள், தூய்மை உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, அமைப்பின் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்

# விளாத்திகுளம் அருகே 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த குழந்தை வடிவிலான அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா



விளாத்திகுளம் செப்டம்பர்01.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள கோவில் குமரெட்டையாபுரம் கிராமத்தில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த குழந்தை வடிவில் அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமிதிருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் என்னும் திருக்குட நன்னீராட்டு பெருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதனை முன்னிட்டு அதிகாலை 4 மணி அளவில் மங்கல இசை, திருமுறை பாராயணம்,ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, புன்யாகவாஜானம், நான்காம் கால யாகசாலை பூஜை,பிம்பசுத்தி,பிம்பரக்ஷா பந்தனம்ஸ்பர் ஷஹூதி (நாடி சந்தானம்) விசேஷ திரவியாஹூதி, யாகத்தில் பட்டு வஸ்திரம் சமர்ப்பணம், மகாபூர்ணாஹூதி, தீபாரணை வேதாபாரபயணம், கோபூஜை,யாத்திர தானம், யாகசாலையில் இருந்து திருக்குடங்கள் புறப்பாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு மேல் 9 மணிக்குள் கன்னியாள கணத்தில் பிரதான கோபுர ராஜகோபுரங்களுக்கும், குழந்தை வடிவிலான அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும், ஏக காலத்தில் மகா கும்பாபிஷேக விழா மற்றும் மகா தீபாரணை ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து பால சுப்பிரமணியசாமி மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மகா அபிஷேகம் மற்றும் பல்வேறு வகையான சிறப்பு அலங்கார பூஜை மற்றும் மகா தீபாதாரணை மந்திர புஷ்பாஞ்சலி சதுர் வேத பாராயணம் மகா கும்பாபிஷேக அருட்பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த குழந்தை வடிவிலான அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமணிய திருக்கோவிலின் மாசி மகம் தேர் திருவிழா, மகா கும்பாபிஷேக திருப்பணிகள் நடைபெற்றதால் இரண்டு ஆண்டுகளாக (தட்டைக்காட்டு) தேர்திருவிழா நடைபெறாமல் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# அவனியாபுரத்தில் சித்தி விநாயகர் திருக்கோவில் மகா அஷ்டபந்தன கும்பாபிஷேகம்



மதுரை மாவட்டம் அவனியாபுரம் எம்எம்சி காலனியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆதிசிவன் திருக்கோவில் மகாஅஷ்டபந்தனகும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கணபதி ஹோமம் லட்சுமி ஹோமம் நவக்கிரக ஹோமம் என சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்ற யாகசாலையில் இருந்து எடுத்துவரப்பட்ட புனித நீரானது கோபுர கலசத்திற்கு ஊற்றப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து விநாயகருக்கு பல்வேறு வகையான அபிஷேக ஆராதனைகளும் தீபாராதனைகள் நடைபெற்றன.

நிகழ்வில் ஏராளமான பக்தர்கள்பொதுமக்கள் பலர்கலந்து கொண்டு தரிசனம் செய்தனர் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது நிகழ்ச்சி ஏற்பாடுகளை பூசாரி சம்பந்கவுன்சிலர் கருப்பசாமிராஜா சேகர். பழனிச்சாமி ராஜேந்தின் தர்மன். பாண்டி.மூர்த்தி. மற்றும் விழா குழுவினர்கள் ஊர் பொது மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்

# தென்காசி மத்திய மாவட்ட த.வெ.க. சார்பில் தமிழக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்




தென்காசி,செப்.01

தென்காசி மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு தென்காசி மத்திய மாவட்ட தவெக சார்பில் தமிழக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மத்திய மாவட்ட செயலாளர் ராஜபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாநில துணை பொதுச்செயலாளர். ராஜகோபால், ஜாகிர் உசேன், மாநில செய்தி தொடர்பாளர் அப்துல் ஜலீல் ஆகியோருக்குமத்தியமாவட்ட செயலாளர் ராஜபிரகாஷ் சிறப்பான வரவேற்பளித்தார். பொதுக்கூட்ட மேடையில்பேசியசிறப்புஅழைப்பாளர்கள் விவசாய கடன் தள்ளுபடி, இலவச மின்சாரம், மகளிருக்கு இலவச பேருந்து பயண வசதி, சிங்கப் பெண் படை போன்ற எண்ணற்ற திட்டங்களை 100 நாட்களில் நிறைவேற்றிய தவெக அரசின் சாதனைகளை சிறப்பு அழைப்பாளர்கள் பொதுமக்களிடம் எடுத்துக்கூறினர். மேலும் தமிழ் நாட்டில் இருந்து வேறு மாநிலங்களுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்வதை மூன்று மாதங்களுக்கு தடை செய்திருப்பது ,அரசு அலுவலகங்களில் பொது மக்களிடம் லஞ்சம் வாங்குவதை தடுத்து நிறுத்தியது இது போன்று எண்ணற்ற செயல்களை கடந்த 100 நாட்களில் தவெக அரசு செய்ததை மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

தவெக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக் கூட்டத்திற்கு மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாநகராட்சியில் முதல் முறையாக தமிழ்த்தாய் பாடி தொடங்கப் பட்ட கூட்டம்



ஈரோடு செப் 1

நகராட்சியாக இருந்த ஈரோடு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது நகராட்சியாக இருந்தபோதில் இருந்தே முதலில் திருக்குறள் படிக்கப் பட்டு பிறகு கூட்டம் தொடங்குவது வழக்கமாக இருந்தது. வழக்கம் போல இன்று மாநகராட்சி கூட்டம் தொடங்கியதும் மேயர் நாற்கரத்தினம் சுப்பிரமணியம் திருக்குறளை படிக்க எழுந்தார். அப்போது திமுக கவுன்சிலரும் மண்டல தலைவருமான பி கே பழனி சாமி எழுந்து சேலம் மாநகராட்சியில் தமிழ் த்தாய் வாழ்த்து பாடிய பின்பு தான் கூட்டம் தொடங்குவது வழக்கமாக உள்ளது .இந்த வழக்கத்தை ஏன் ஈரோடு மாநகராட்சியில் அமல்படுத்தக் கூடாது என்று கேட்டார். இதற்கு உடனே மேயர் சம்மதித்து தமிழ்த் தாய் வாழ்த்து பாடலாம் என்று உத்தரவிட்டார். இது தொடர்ந்து மேயர் கமிஷனர் துணை மேயர் மற்றும் கவுன்சிலர்கள் எழுந்து நின்று தமிழ் த்தாய் பாடலை பாடினார்கள். இதன் பிறகு கூட்டம் தொடங்கியது. இதைத் தொடர்ந்து கூட்டத்தில் கார சார விவாதம் நடந்தது . முன்னதாக இன்று காலை 11 மணி அளவில் கூட்டம் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டது ஆனால் 12 மணி ஆகியும் கூட்டம் தொடங்கவில்லை கமிஷனர் அர்பித் ஜெயின் மட்டும் கூட்டத்தில் உள்ள தனது இருக்கையில் அமர்ந்து இருந்தார்.ஆனால் மேயர் அறையில் இருந்த ஈரோடு மாநகர செயலாளர் சுப்பிரமணியம் மண்டல தலைவர்கள் கவுன்சிலர்கள் ஆகியோரை தனியாக மேயர் அறைக்கு அழைத்தார் . இது பற்றி கவுன்சர்கள் கேட்ட போது முக்கியமான ஆலோசனை என்று கூறினார். பூட்டிய மேயர் அறைக்குள் இந்த ரகசிய ஆலோசனை நடந்தது. இதன் பிறகு 1 மணி நேரம் தாமதமாக கூட்டம் தொடங்கியது.



# தஞ்சாவூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் ரேவதி தலைமையில் நடை பெற்றது

தஞ்சாவூர் செப்.1


தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர்அலுவலககூட்டரங்கில் பொது மக்கள் குறைதீர்க்கும்நாள்கூட்டம் மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமை யில் நடைபெற்றது

கூட்டத்தில்இலவசவீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை கள் அடங்கிய 457மனுக்களை பொது மக்கள் மாவட்ட கலெக்டரிடம் வழங்கினார்கள். இம் மனுக்கள் மீது உரியநடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் ரேவதி உத்தரவிட்டார்அதனைத் தொடர்ந்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் மின்கலம் பொருத்தப்பட்ட நவீன சக்கர நாற்காலி ரூபாய் 1, 14,000 மதிப்பில் 1பயனாளிக்கும்,மடக்கு சர்க்கரை நாற்காலில் ரூபாய்15000 மதிப்பிலா ன 1 பயனாளிக்கும்,மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் தலா 6500 மதிப்பில் 3 பய னாளிகளுக்கும் என மொத்தம் 1, 48, 500 மதிப்பில் 5 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்

அதனைத் தொடர்ந்து 2025 2026 ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த பார்வைத் திறன் குறைபாடு உடைய மற்றும் செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கான அரசு மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் ரேவதி வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இளங்கோவன், தனித் துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் சௌமியா, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைப்பதியில் ஆவணி திருவிழா தேரோட்டம்



தென்தாமரைகுளம்., செப். 01

சாமிதோப்பு அய்யா வைகுண்டசமி தலைமைப்பதியில் ஆவணி திருவிழா தேரோட்டம் நேற்று நடைபெற்றது. சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமிதலைமை ப்பதியில் ஆவணி திருவிழா கடந்த 21 ம் தேதி காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா தொடர்ந்து 11 நாட்கள் நடைபெற்றது. கடந்த 28ஆம் தேதி 8ம் திருவிழா அன்று அய்யா வைகுண்ட சாமி வெள்ளை குதிரை வாகனத்தில் எழுந்தருளி கலிவேட்டை நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவின் 11வது நாளான நேற்று நண்பகல் 12 மணிக்கு தேரோட்டம் நடைபெற்றது. தேரோட்ட நிகழ்ச்சியை முன்னிட்டு நேற்று அதிகாலை 4 மணிக்கு திரு நடைதிறத்தலும், தொடர்ந்து அய்யாவுக்கு சிறப்பு பணிவிடையும் நடைபெற்றது. நண்பகல் 12 மணிக்கு அய்யா வைகுண்டசாமி பச்சை பல்லாக்கு வாகனத்தில் வந்து பஞ்சவர்ண தேருக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடந்தது.தொடர்ந்து 12 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட பஞ்சவர்ணதேரில்அய்யா வீற்றிருக்க தேரோட்டம் தொடங்கியது. தேரோட்ட நிகழ்ச்சிக்கு குரு மகாசன்னிதாளம் பால. பிரஜாபதி அடிகளார் தலைமை வகித்தார். குருமார்கள். பால. லோகாதிபதி, பையன் கிருஷ்ணராஜ், பையன் கிருஷ்ண நாமமணி, பையன் செல்ல வடிவு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தேர்பணிவிடைகளை குருமார்கள் பையன் அம்பிரிஷ்,செல்லா, பையன் நெமிரிஷ் ,பையன் கவுதம் ராஜா, பால கிருஷ் ஆகியோர் செய்தனர். தலைமைப்பதியின் முன்பிருந்து புறப்பட்ட திருத்தேர் கீழரத வீதி, தெற்கு ரதவீதி, மேல ரத வீதி வழியாக வடக்கு ரத வீதியில் உள்ள தலைமைப்பதியின் வடக்கு வாசல் பகுதிக்கு வந்தது.திருத்தேர் வடக்கு வாசல் பகுதிக்கு வரும் போது திரளான அய்யாவழி பக்தர்கள் அய்யா வைகுண்டசாமிக்கு பழம், வெற்றிலை,பாக்கு,பன்னீர்உள்ளிட்டபொருட்களை நீண்ட வரிசையில் நின்று சுருளாக படைத்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட திருத்தேர் மாலை 6 மணிக்கு நிலைக்கு வந்தடைந்தது. தேரோட்ட நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அய்யா வழி பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.பின்னர் நேற்று இரவு 7 மணிக்கு அய்யாவின் ரிஷப வாகன ஊர்வலம் நடைபெற்றது.பின்னர் அதிகாலை அய்யாவுக்கு பணிவிடையும் தொடர்ந்து திருக்கொடி இறக்கம் நிகழ்ச்சியும் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை தலைமைபதி நிர்வாகிகள் செய்திருந்தனர்.




வேலூர் ஜெம்ஸ் ரோட்டரி சங்கம் அகில இந்திய கட்டுநர் சங்கம் கரிகிரி மருத்துவமனை மற்றும் வேலூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் தொரப்பாடி சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. இம்முகாமில் கண் சம்பந்தமான அனைத்து நோய்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும் கண்ணில் குறை உள்ளவர்களுக்கு உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இலவசமாக கண்புரை நீக்கி லென்ஸ் பொருத்தப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை ஜெம்ஸ் ரோட்டரி சங்க தலைவர் பி.வேல்முருகன் செயலாளர் என்.சங்கர் பொருளாளர் பி சிவா மற்றும் தொழிலதிபர் பொய்கை ரஞ்சன் ஆகியோர் செய்திருந்தனர

# நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் பலியான மக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது



கிருஷ்ணகிரியில்நேபாளத்தில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. கடந்த சில நாட்களாக நேபாளத்தில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். இந்நிலையில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும், பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் மீண்டு வரவும் வேண்டி தவெக சட்ட மன்ற உறுப்பினர் முகுந்தன் தலைமையிலும் சமூக நுகர்வோர் பாதுகாப்பு நலச்சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர்சந்திரமோகன்முன்னிலையில் மெழுகு வர்த்தி ஏற்றி பெரும் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி மௌன அஞ்சலி செலுத்தினார்கள். இதேபோல் சமூக நுகர்வோர் பாதுகாப்பு நலச் சங்கத்தின் மகளீர் அணி செயலாளர். பத்மா, மாநில துணைத் தலைவர் வாஞ்சிநாதன், மாவட்ட செயலாளர் மாதேஷ் , மாவட்ட தலைவர்சிவசக்திவேல், மாவட்ட செயற்குழு கூறுப்பினர் தில்லை ராஜா, மாவட்ட மகளீர் அணி துணைத் தலைவி. சரண்யா, மாவட்ட துணைத்தலைவர்சுந்தரேசன், மாநில செயற்குழு உறுப்பினர் சந்தோஷ், சமூக ஆர்வாளர்.

ராதா உள்ளிட்ட பொது மக்காளும் கலந்துக் கொண்டு நேபாளத்தில் வெள்ளத்தினால் பாதிக் கப்பட்டுள்ள மக்களும் விரைவில் இயல்பு வாழ்க்கைக்கு திருப்ப வேண்டும் என்று மெழுகு வர்த்திஏற்றி வழிப்பட்டனர்.

# பேரிடர் மேலாண்மை துறை சார்பில் எல்நினோ முகாம் 3ம் தேதி

## கலெக்டர் தகவல்

நாகர்கோவில், செப்.1

கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்நினோ உள்ளிட்ட காலநிலை நிகழ்வுகள் மற்றும் அவற்றின் தாக்கத்தால் ஏற்படக்கூடிய மழைபொழிவு மாறுபாடு, வெப்பநிலை உயர்வு, கடல் சீற்றம், கடல் அரிப்பு உள்ளிட்ட இயற்கை மாற்றங்கள் தொடர்பாக விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு உரிய விழிப்புணர்வு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஏற்படுத்தும் நோக்கில், கன்னியாகுமரி மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின்சார்பில்மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டம் 03.09.2026 (வியாழக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு சுங்கான்கடையில் உள்ள பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி கூட்ட அரங்கில் வைத்து நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் காலநிலை ஆய்வாளர்கள் சிறப்பு அழைப்பாளர்கள்கலந்துகொாண்டு எல் நினோ நிகழ்வின் தன்மை, அதன் காரணமாக ஏற்படக்கூடிய வானிலை மாற்றங்கள், மழைபொழிவு மாறுபாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் வானிலை நிலவரங்கள் குறித்து அறிவியல் பூர்வமான விளக்கங்களை வழங்க உள்ளனர்.

மேலும், எல் நினோ மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் விவசாயத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், பயிர்பாதுகாப்பு, நீர் மேலாண்மை மற்றும் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட உள்ளது மீனவர்கள் பொறுத்த வரையில் கடல் சீற்றம், பலத்த காற்று, கடல் அரிப்பு, கடல் நிலை மாற்றங்கள் மற்றும் மோசமான வானிலை நிலவரங்களின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் இயற்கைப் பேரிடர்களின் தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை, தயார் நிலை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுபடுத்துவதன் அவசியம் குறித்தும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட உள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள், மீனவர்கள், விவசாய மற்றும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து தரப்பினரும் இவ்விழிப்புணர்வு கூட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்டு, எல் நினோ மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அறிவியல் பூர்வ தகவல்களை அறிந்து கொண்டு, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வானிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை பேரிடர்களை உரிய முன்னெச்சரிக்கையுடன் எதிர்கொள்ள தயாராக வேண்டுமென கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கேட்டுக் கொண்டுள்ளார்.

# குமரியில் கனிமவள கடத்தலுக்கு பணம் வாங்கிய எஸ் எஸ்ஐ, ஏட்டு ஆயுதப்படைக்கு மாற்றம்

## எஸ்பி ஸ்டாலின் அதிரடி

மார்த்தாண்டம், செப்.1 குமரி மாவட்டத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு கனிம வளங்கள் அதிக அளவில் கடத்தப்பட்டு வருகிறது. இதை தடுக்கும் வகையில் குமரி மாவட்ட போலீஸ் எஸ் பி ஸ்டாலின் தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழக கேரள எல்லை பகுதிகளில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு பணிகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில் சோதனை சாவடிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் சில போலீசார் தமிழகத்திலிருந்து சட்ட விரோதமாக கனிம வளம் கொண்டு செல்லும் லாரி டிரைவர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொண்டு கேரளாவுக்கு செல்ல அனுமதிப்பதாக புகார் எடுத்தது. அதை தொடர்ந்து எஸ்பி உத்தரவின் பேரில் ரகசியமாக சில போலீசார் மப்டி உடையில் சோதனை சாவடியில் போலீசார் பணம் பெறுகிறார்களா? என்பதை கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த வகையில் போலீசார் செறிய கொல்லா என்ற இடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் ரகசியமாக கண்காணித்தனர். அப்போது அங்கு பணியில் இருந்த மார்த்தாண்டம் காவல் நிலைய எஸ் எஸ் ஐ ஜெயக்குமார் என்பவர் லாரி டிரைவரிடம் பணம் வாங்கிக்கொண்டு கேரள மாநிலத்திற்கு லாரிகளை அனுப்பியது கண்டுபிடித்தனர். இதை வீடியோவாக எடுத்து ஆதாரமாக எஸ்பிக்கு அனுப்பி வைத்தனர்.

இதேபோன்று மத்தம் பாறை சோதனை சாவடியில் ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்ட போலீசார் ஆறுகாணி காவல் நிலையத்தில் ஏட்டாக பணியாற்றும் ரமேஷ் என்பவர் பணத்தை வாங்கிக் கொண்டு லாரிகளை கேரளாவுக்கு செல்ல அனுமதித்ததையும் கண்டுபிடித்தனர். இது குறித்து வீடியோ ஆதாரத்துடன் மாவட்ட எஸ்பிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதை அடுத்து இரண்டு ஆதாரங்களையும் ஆய்வு செய்த எஸ்பி ஸ்டாலின் சோதனை சாவடியில் பணம் வாங்கிய மார்த்தாண்டம் எஸ் எஸ் ஐ ஜெயக்குமார், ஆறுகாணி எட்டு ரமேஷ் ஆகியோரை ஆயுதப்படைக்கு இடமாற்றம் செய்து உத்தரவிட்டார். இந்த சம்பவம் போலீசார் இடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# அகஸ்தீஸ்வரம் திமுக வடக்கு ஒன்றிய தேரூர் பேரூர் தி.மு.க செயல் வீரர்கள் கூட்டம்

சுசீந்திரம். செப். 1 தேரூர்பேரூர்கழகசெயல் வீரர் கூட்டம் பெரூர் செயலாளர் முத்து தலைமையில் ஒன்றிய செயலாளர் மதியழகன் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலாளர் மகேஷ் கலந்து கொண்டு சிறப்பாக தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகளை சிறப்பு செய்தார் பின்பு வரும் தேர்தலில் திமுக உறுப்பினர்கள் செயலாற்றுவது குறித்து விழிப்புணர்வு உரையாற்றினார் .நிகழ்வில் ஸ்ரீமுகி முருகன் , ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் சோமசுந்தரம், இளைஞரணி சுரேஷ் குமார், தங்கப்பன், ஐயப்பன், சக்தி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், அஞ்செட்டி வட்டத்தில் நடைபெற்ற "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமில், அஞ்செட்டி வட்டடம், யாரப் நகர் பகுதியைச் சேர்ந்த .கமலா க/பெ.ராஜேந்திரன் குடும்ப அட்டை வேண்டி மனு அளித்ததையடுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் குடும்ப அட்டையை வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, உதவி ஆட்சியர் (பயிற்சி) .சாய் சைதன்யாஜாதவ்., மாவட்ட வழங்கல் அலுவலர் .கீதாராணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) .அபிநாய உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஓசூர் அருகே 6 கோடி மதிப்புள்ள போதை பொருட்கள் கண்டுபிடிப்பு: இன்ஸ்பெக்டர் இளவரசனுக்கு பாராட்டு

கிருஷ்ணகிரி செப். 1: கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஜூஜூவாடி சோதனை சாவடிக்கு கடந்த 29.08.2026ம் தேதி பெங்களூரில் இருந்து தனியார் பேருந்து மூலம் நீல நிற ஜீன்ஸ் பேண்ட் மற்றும் வெள்ளை நிறத்தில் பூப்போட்ட சட்டை அணிந்த நபர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில், சிப்காட் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இளவரசன் மற்றும் அவரது குழுவினர் மேற்படி ஜூஜூவாடி சோதனை சாவடியில் தொடர் வாகன சோதனை மேற்கொண்டனர், அப்போது TN 42 AT 6596 என்ற பதிவு கொண்ட SGT Travels ஆம்னி பேருந்து தடுத்து சோதனை செய்தனர். அவ்வாறு சோதனை செய்த போது பேருந்தின் லக்கேஜ் வைக்கும் பகுதியில் இருந்த கருப்பு மற்றும் சிவப்பு நிற தோல் பையை சோதனை செய்ததில், அதில் தலா சுமார் 1 கிலோ எடையுள்ள 6 பொட்டலங்களாக சுமார் 6 கோடி மதிப்பிலான மொத்தம் 6 கிலோ மெத்தப்பட்டமைன் போதைப்பொருள் மறைத்து கடத்தி வந்தது கண்டறியப்பட்டது. இது தொடர்பாக மேற்கண்ட பேருந்தில் பயணித்து வந்த திருவள்ளூர் மாவட்டம் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் கலெக்டர் நகர் 2வது தெருவை சேர்ந்த ரகு (32), த/பெ.திரு செல்வம் என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா வெகுவாக பாராட்டினார்.

# ஊத்தங்கரையில் தமிழக வெற்றி கழகத்தின் 100 நாள் சாதனை விளக்கு பொதுக்கூட்டம்

## சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் என் இளையராஜா பங்கேற்பு



ஊத்தங்கரை கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை நான்கு முனை சந்திப்பில் தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியின் நூறு நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி தென்கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் என் இளையராஜா தலைமையில் நடைபெற்றது, கூட்டத்தில் கட்சியின் மாநில வலைத்தள செய்தி தொடர்பாளர் தமிழன் ராகுல் காந்தி சிறப்புரையாற்றினார், இந்த நிகழ்ச்சிக்கு தென்கிழக்கு மாவட்ட கழக இணை செயலாளர் தாமோதரன், மாவட்ட கழகப் பொருளாளர் மணிகண்டன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் சித்திக், கீர்த்தனா ,மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கார்த்திகேயன் , சிங்காரவேல், இப்ராஹிம், ஹரிதாஸ், ஹரிஹரன், லோகநாதன், மணிகண்டன், கோவிந்தராஜ், வினோத் குமார், திருமதி அர்ச்சனா, பேரூர் கழக செயலாளர் ரமேஷ், பேரூர் கழக இணை செயலாளர் இறையன்பு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமதுரை, தினேஷ் கண்ணன், சக்திவேல், உமாபதி, திருமூர்த்தி, சக்தி ,சிவா, விக்னேஷ் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஜெகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தீபா தாமோதரன், உறுப்பினர் சேர்க்கை ஒருங்கிணைப்பாளர் கார்முகில் வேந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ஏராளமானவர் இதில் கலந்து கொண்டனர், நிகழ்ச்சியில் ஒன்றிய பேரூர் கழகப் பொறுப்பாளர்கள் சார்பா அமைப்பு நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# ஆம்பூர் ஸ்டார் பள்ளியில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி



திருப்பத்தூர்:செப்:01, திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் ஸ்டார் பள்ளியில் ஒருங்கிணைந்தவேலூர்மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில செயலாளர் ஜெயசுதா தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக ஜெம் மருத்துவமனை உரிமையாளர் சுரேஷ், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் பாண்டியன், மாவட்ட செயலாளர் குணசேகரன், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சதுரங்கப் போட்டியை தொடங்கி வைத்தனர்.

போட்டியில் வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், குடியாத்தம், பேர்ணாம்பட்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், 7 வயது முதல் 55 வயது வரை பல்வேறு வயதினரும் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது சதுரங்கத் திறமையை வெளிப்படுத்தினர்.

போட்டியில் முதல் பரிசை சிவனேஷ், இரண்டாம் பரிசை ஜோஷித், மூன்றாம் பரிசை பூர்விகா பெற்றனர். மேலும் சிறப்பாக விளையாடியவர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மேனாள் மாநில பொதுச் செயலாளர் எஸ். சுப்ரமணி, மாவட்ட பொருளாளர் சபாரத்தினம், மாவட்ட துணைத் தலைவர்கள் சரவணன், உதயகுமார், கருணாகரன், மேலும் பிள்ளை, எழிலரசன், கல்பனா, பிரியா, சரோஜினி, பழனி, சுபஸ்ரீ, சுரேந்தர், சூர்யா, இசைத்தமிழ், ஸ்டெல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அறிவியல் இயக்க பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினர். சதுரங்கப் போட்டியில் 250க்கும் மேற்பட்டோர் பங்கேற்றது நிகழ்ச்சிக்கு சிறப்பை சேர்த்தது.

# சீரடி சாய்பாபா கோவிலுக்கு 150 பக்தர்கள் இலவச ஆன்மிகப் பயணம்



வேலூர், செப்.1: வேலூர் அண்ணா சிலை அருகே உள்ள திருப்பதி தேவஸ்தானம் கோவில் வளாகத்தில், தமிழ்நாடு நாயுடு சங்கம் சார்பில் மகாராஷ்டிரா மாநிலம் சீரடியில் உள்ள சாய்பாபா திருக்கோவிலுக்கு 150 பக்தர்கள் இலவசமாக சென்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வேலூர் மாநகர மாவட்ட நாயுடு சங்கத் தலைவர் 7ஜி. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சீரடி சாய்பாபா கோவிலுக்கு செல்லும் 150 பக்தர்களுக்கும் இலவச ரெயில் பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டன. மேலும், சீரடியில் பக்தர்கள் தங்குவதற்கான அறை வசதி, உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்று, மீண்டும் அழைத்து வருவதற்காக ஒருங்கிணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பயணத்தின்போது பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் உறுதி செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

01.09.2026 முதல் 05.09.2026 வரை நடைபெறும் இந்த ஆன்மிகப் பயணத்தில் 150 பக்தர்கள் கலந்து கொண்டு சீரடி சாய்பாபாவை தரிசனம் செய்ய உள்ளனர். பக்தர்களின் ஆன்மிகப் பயணத்தை முன்னிட்டு ரெயில் பயணச்சீட்டு, தங்குமிடம், உணவு, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் இலவசமாக செய்யப்பட்டிருப்பது பக்தர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கோவை சூலூர் என்.எம்.சுகுமார் எம்எல்ஏ இல்ல திருமண விழாவில் அமைச்சர் எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு



கோவை செப்:01 கோவை மாவட்டம் வெள்ளலூர் வெள்ளலூர் என்.எம்.சுகுமார் எம்.எல்.ஏ., எஸ்.பூங்கொடி தம்பதியர் மகனுமான எஸ்.கவுதம் வணிகவரித் துறையில் துணை மாநில வரி அலுவலராக உள்ளார்.

இவருக்கும், மதுரை மாவட்டம் சமயநல்லூர் எம்.சரவணகுமார் டாக்டர் டி. சுகந்த லெட்சுமி தம்பதியர் மகளுமான எஸ்.பிரியங்காவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

மணமக்கள் கவுதம்பிரியங்கா திருமண விழா சிங்காநல்லூர், ஸ்ரீ வெங்கடலட்சுமி திருமண மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த விழாவில் கோவை சூலூர் என்.எம். சுகுமார் எம்.எல்.ஏ இல்ல திருமண விழாவில் அமைச்சர்கள் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன் மணமக்களான எஸ் கெளதம், எஸ் பிரியங்கா திருமணநிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் விழாவில் எம்.எல்.ஏ.க்கள் மற்றும் த.வெ.க.மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி, சார்பு அணி, மாணவரணி, இளைஞரணி, மகளிர் அணியினர், பகுதி, கிளை, வார்டு நிர்வாகிகள் மற்றும் அரசியல் தலைவர்கள், பொது மக்கள் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

# இராஜா பேட்டை ஸ்ரீ பெரியாண்டவர் ஸ்ரீ புத்து மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழா



தருமபுரி செப்.01 தருமபுரி மாவட்டம் செட்டிக்கரை ஊராட்சி இராஜா பேட்டையில் அமைந்துள்ளஸ்ரீ பெரியாண்டவர், ஸ்ரீ புத்து மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த கும்பாபிஷேக விழாவானது கடந்த 27ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து கணபதி பூஜை, வாஸ்து பூஜை, நவகிரக ஹோமம், கோபூஜை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தீர்த்த குடம் ,முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வான யாக சாலையில் வைத்து பூஜைக்கப்பட்ட புனித தீர்த்தக்குடத்தை சிவாச்சாரியார்கள் மந்திரங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் சென்று ஸ்ரீ பெரியாண்டவர் மற்றும் ஸ்ரீ புத்து மாரியம்மனுக்கு புனித நீரானது ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது . அதனை தொடர்ந்து தீர்த்தத்தை பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ பெரியாண்டவர், ஸ்ரீ புத்துமாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள், மகாதீபாரதனைகள் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தனர். இந்த கும்பாபிஷேக விழாவில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அதனை தொடர்ந்து அனைவருக்கும் திருக்கோவில் சார்பில் அன்ன தானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# 'விழுதுகள்' ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் பல்வேறு சிகிச்சை மற்றும் பயிற்சிகள்

## முதலமைச்சருக்கு மாற்றுத்திறனாளிகள் நன்றி

ஈரோடு: மாற்றுத்திறனாளிகளின் நலன் மற்றும் மறுவாழ்வை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்குத் தேவையான பல்வேறு மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், உலக வங்கி நிதியுதவியுடன் 'விழுதுகள்' ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையங்கள் ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

அதன்படி, பவானிசாகர் அரசு மேல்நிலைப்பள்ளி, தூக்கநாயக்கன்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகம் மற்றும் பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகம் உள்ளிட்ட இடங்களில் 'விழுதுகள்' ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் ஏற்கனவே 2 உட்கோட்ட அளவிலான மறுவாழ்வு சேவை மையங்களும், 18 வட்டார அளவிலான 'விழுதுகள்' மறுவாழ்வு சேவை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஈரோடு, கோபி, சித்தோடு, மொடக்குறிச்சி, சிறுவலூர், நம்பியூர், புஞ்சை புளியம்பட்டி, பவானி, தாளவாடி, அந்தியூர், சத்தியமங்கலம், சென்னிமலை மற்றும் ஈரோடு மாநகராட்சி கருங்கல்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் புதிதாக 13 'விழுதுகள்' மையங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்புக் கல்வி, பேச்சு மற்றும் மொழிப் பயிற்சி, பார்வைக் குறைபாடுகளைக் கண்டறிதல், பிசியோதெரபி (இயன்முறைப் பயிற்சி), உளவியல் ஆலோசனை, செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறிதல் உள்ளிட்ட பல்வேறு மறுவாழ்வு சேவைகள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்குத் தேவையான சேவைகளை ஒரே இடத்தில் எளிதாகப் பெறுவதுடன், சிகிச்சை மற்றும் பயிற்சிகளுக்காக வெவ்வேறு இடங்களுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய சிரமமும் குறைந்துள்ளது.



பயனாளிகளின் அனுபவம்

அம்மாபேட்டை ஒன்றியம், பட்லூர் ஊராட்சியைச் சேர்ந்த 16 வயதான அபர்ணா, பிறக்கும்போதே 'ஸ்பாஸ்டிக் டிப்ளீஜியா' எனப்படும் தசை மற்றும் கால்கள் தொடர்பான குறைபாட்டுடன் பிறந்தவர். அவருக்கு 60 சதவீத மாற்றுத்திறன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிசியோதெரபி எனப்படும் இயன்முறைப் பயிற்சிக்காக பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்த நிலையில், தற்போது 'விழுதுகள்' ஓரிட சேவை மையம் மூலம் தொடர்ந்து பயிற்சி பெற்று வருகிறார். பயிற்சியாளர்கள் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தேவையான பயிற்சிகளை கற்றுக்கொடுத்து, வீட்டிலும் தினசரி பயிற்சிகளை மேற்கொள்ள வழிகாட்டி வருகின்றனர்.

தொடர்ந்து இரண்டு மாதங்கள் இயன்முறைப் பயிற்சி மேற்கொண்டதன் மூலம் உடல் இயக்கம் மற்றும் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அபர்ணா தெரிவித்தார். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்காக ஓரிட சேவை மையத்தை அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு அவர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

இதேபோல், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட முடுக்கந்துறை பகுதியைச் சேர்ந்த 42 வயதான கோவிந்தம்மாள், தனது காலில் ஏற்பட்ட இயக்கக் குறைபாடு காரணமாக அன்றாட பணிகளை மேற்கொள்வதில் சிரமப்பட்டு வந்ததாக தெரிவித்தார்.

சிகிச்சைக்காக அதிக செலவு ஏற்படுவதுடன், வெகுதூரம் செல்ல வேண்டிய நிலையும் இருந்ததால் தொடர்ந்து சிகிச்சை பெற முடியாமல் சிரமப்பட்டதாகவும், தற்போது பவானிசாகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் செயல்படும் 'விழுதுகள்' மையத்தில் தொடர்ந்து உடல் இயக்கப் பயிற்சி பெற்று வருவதால் உடல் நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான மறுவாழ்வு சேவைகளை ஒரே இடத்தில் பெற வழிவகை செய்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோவிந்தம்மாளும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஈரோடு மாவட்டம்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.